செ.வெ.எண்.22 நாள்.07.08.2017.

திருநெல்வேலி அரசுப் பொருட்காட்சியை இதுவரை 1,42,237நபர்கள் கண்டு களித்துள்ளனர்.
நுழைவு கட்டணமாக ரூ.19.72 இலட்சம் அரசு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

-------

திருநெல்வேலி மாவட்டத்தில், அரசுப் பொருட்காட்சி அருள்மிகு நெல்லையப்பர்–அருள்தரும் காந்திமதி அம்பாள் திருக்கோவில் ஆனித் தேரோட்டத்தினை முன்னிட்டு, ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது. இவ்வாண்டு, அரசுப் பொருட்காட்சியினை மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜு அவர்கள் 25.06.2017 அன்று திறந்து வைத்தார்கள்.

அரசுப் பொருட்காட்சி நுழைவு கட்டணம் 26.06.2017 அன்று முதல் வசூல் செய்யப்பட்டு வருகிறது. சிறியவர்களுக்கு நுழைவு கட்டணமாக ரூ.10/–ம், பெரியவர்களுக்கு ரூ.15/–ம், பள்ளிகள் மூலம் அழைத்து வரப்படும் குழந்தைகளுக்கு சலுகைக் கட்டணமாக ரூ.5/–ம் என கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு வருகிறது.

இதுவரை 42 தினங்களில் பெரியவர்கள் 1,11,957 நபர்களும், சிறியவர்கள் 28,212 நபர்களும், பள்ளிக் குழந்தைகள் 2068 குழந்தைகளும் என மொத்தம் 1,42,237 நபர்கள் வருகை தந்துள்ளனர். பெரியவர்கள் மூலம் ரூ.16,79,355/–ம், சிறியவர்கள் மூலம் ரூ.2,82,120/–ம், பள்ளிக் குழந்தைகள் மூலம் ரூ.10,340/–ம் என மொத்தம் ரூ.19,71,815/– அரசுக்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. அரசுப் பொருட்காட்சி வருகின்ற 09.08.2017 அன்றுடன் நிறைவுபெறுகிறது.

அரசுப் பொருட்காட்சியில், அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த அரங்குகளையும், பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா புகைப்படக் கண்காட்சியினையும் பொதுமக்கள் ஆர்வத்துடன் கண்டு களித்து வருகின்றனர். மேலும், அரசுப் பொருட்காட்சியில், பொழுதுபோக்கு அம்சங்கள் மக்களை கவரும் வகையில் உள்ளது. பொருட்காட்சி மைதானத்தில் அண்ணா கலையரங்கில் தினசரி நாடகங்கள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.